# பெண் சாதனையாளர்களை கௌரவித்தல் - சர்வதேச மகளிர் தினம் 2024

## மகளிர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்

### தலைப்பு : பெண் சாதனையாளர்கள் தெரிவு

<u>போட்டிக்கான நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்</u>

- பெண் சாதனையாளர்களாக பங்குபற்றுபவர்கள் வடக்கு மகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவராயிருத்தல் வேண்டும்.

- சாதனையாளர் ஒரு நபராகவோ அல்லது குழுவாகவோ இருக்க முடியும்.

- பெண் சாதனையாளர்களுக்கான விருதினை கடந்த காலங்களில் தேசிய, மாகாண ரீதியில் பெற்றவர்கள் தவிர ஏனையவர்கள் பங்குபற்ற முடியம்.

- சாதனையாளர் என்பதற்கான ஆதாரங்கள் நம்பகத்தன்மைவாய்ந்ததாகவும் உறுதிப்படுத்தப்படகூடியதாகவும் இருப்பதுடன் ஆவணங்கள் இணைக்கப்படுவது அவசியமாகும்.

- மேலதிக விபரங்கள் அமைச்சினால் கோரப்படின் அதற்குரிய ஆவணங்கள் கோரப்படும் நியாயமான கால எல்லைக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

.

- சாதனையாளர் ஒருவர் ஒரு விண்ணப்பத்தினை மட்டும் அனுப்ப முடியும்.

- சாதனையாளர் ஒருவரை பரிந்துரைக்க விரும்பினால் பரிந்துரைப்பவர் தங்களுடைய விபரங்களுடன் குறிப்பிட்ட சாதனையாளரின் விபரங்களை அனுப்பி வைக்கவேண்டும்.

- பின்வரும் துறைகளில் உள்ள பெண் சாதனையாளர்கள் விண்ணப்பிக்கலாம். (இலக்கியம், கலை, விளையாட்டு, ஊடகம், தொழில்முயற்சி,இன்னும் பல துறைகள் உள்ளடங்களாக )

- நடுவர்களால் தெரிவு செய்யப்படும் சிறந்த பெண் சாதனையாளர் சர்வதேச மகளிர் தினம் 2024 அன்று கௌரவிக்கப்படுவர்.

- பெண் சாதனையாளர் தெரிவிற்கு பின்வரும் தரவுகளுடன் மேலதிக தரவுகள் இருப்பின் உள்ளடக்கப்படவேண்டும்

  பெண் சாதனையாளர் முழுப் பெயர் :

  தேசிய அடையாள அட்டை இல :

  முகவரி :

  தொலைபேசி இல. :

  சாதனைத் துறை :

  தாங்கள் சாதனையாளராக விண்ணப்பிப்பதற்கான காரணம் :

  சாதனையாளர் என்பதற்கான ஆதாரங்கள் :

  (விபரங்கள் இணைப்பில் குறிப்பிடப்பட வேண்டும்)

- எமக்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மதிப்பீட்டுக் குழுவினரால் சாதனையாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். நடுவர்களின் முடிவே இறுதியானதாகும்.

- விண்ணப்ப தலைப்பு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.

- நிபந்தனைகளுக்குப் பொருத்தமான பெண் சாதனையாளரின் விண்ணப்பப்படிவம் 16.01.2024 இற்கு முன்னர் கிடைக்கும் வகையில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ எமக்கு சமர்ப்பிக்கவும்.

- குறிப்பிடப்பட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

- விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்க வேண்டிய முகவரி

  செயலாளர்,<br>
  மகளிர் விவகார அமைச்சு,<br>
  வடக்கு மாகாணம்,<br>
  இல. 04, புரூடி லேன்,<br>
  புங்கன்குளம் சந்தி,<br>
  அரியாலை,<br>
  கண்டி வீதி,<br>
  யாழ்ப்பாணம்.